செ.வெ.எண:29 நாள்:10.08.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் 1 முதல் 19 வயது வரை உள்ள 9,23,986 மாணவ, மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படுகிறது.**

**திருநெல்வேலி கல்லனை மகளிர் மேல்நிலைபள்ளியில் மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தகவல்**

---

திருநெல்வேலி டவுன் கல்லனை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைபள்ளியில் தேசிய குடற்புழு நீக்க தினத்தையொட்டி சுகாதாரத்துறையின் மூலம் குடற்புழு மாத்திரைகளை வழங்கும் நிகழச்சி இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு மாணவிகளுக்கு குடற்புழு மாத்திரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் பேசியதாவது.

உலக அளவில் இன்று தேசியகுடற்புழு நீக்க நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் தேசிய குடற்புழு நீக்க தினத்தின்று குடற்புழு மாத்திரைகள் வழங்கப்படுகிறது. இம்மாத்திரைகளை எடுத்துக் கொள்வதால் குடற்புழுக்கள் அழிவதுடன் உடல் எதிா்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் அங்கன்வாடிமையம், பள்ளி, கல்லூரிகள் மூலம் 1 வயது முதல் 19 வயது வரையுள்ள 9,23,986 நபர்களுக்கு குடற்புழு மாத்திரைகள் வழங்கப்படுகிறது. இதில் திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் மட்டும் 1,24,300 நபர்களுக்கு வழங்கபடுகிறது. கல்லனை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 4302 மாணவிகளுக்கு இன்று வழங்கபடுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பெண் குழந்தைகள் திருமணம் தடைசெய்யும் வகையிலும், பெண் குழந்தைகளுக்கான பிரச்சினைகளை தீர்க்கும வகையிலும் சமூக நலத்துறையின் மூலம் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பம் வகையில் போஸ்டல் அட்டைகள் வழங்கப்பட்டுவருகிறது. குழந்தை திருமணம் செய்ய ஏற்பாடு செய்தாலோ, உங்களுக்கு மற்றும் தோழிகளுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் கார்டில் எழுதி எனக்கு அனுப்பலாம் உடன் நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும். நீங்கள் அணைவரும் 12ம் வகுப்பு முடித்தவுடன் தொடர்ந்து உயர் கல்வி கணடிப்பாக படிக்க வேண்டும். கல்வி கற்றால்தான் பல்வேறு வேலை வாய்ப்பு பெற்று தன்னம்பிக்கையுடன் செயல்படமுடியும் சுகாதார பழக்க வழக்கங்கள் மூலம் நோயற்ற வாழ்வு வாழலாம். திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத மாவட்டமாக திகிழ்திட பல்வேறு நடவடிக்கை எடுக்கபட்டுவருகிறது. மாணவிகள் திறந்த வெளி கழிப்பிடங்களை பயன்படுத்தகூடாது. தங்களது இல்லங்களில் கழிப்றைகளை கட்ட பெற்றோர்களை வலியுறுத்தவேண்டும் தங்களது உறவினர்கள் மற்றும் தோழிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். என பேசினார்.

இக்கூட்டத்தில் சுகாதார பணிகள் துனை இயக்குனர்கள் (திருநெல்வேலி) மரு.செந்தில்குமார், (சங்கரண்கோவில்) மரு.சோமசுந்தரம், மாநகர நல அலுவலர் மரு.பொற்ச்செல்வன். மாவட்ட விரிவாக்க கல்வி அலுவலர் திரு.அப்துல் காதர்,கல்லனை பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி நாச்சியார்(எ)ஆனந்த பைரவி,மருத்துவ அலுவலர்கள் மரு.சரவண பிரகாஸ்,மரு.முத்துராமலிங்கம் மற்றும் அசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி**